## மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்

**G.W.O.P. No. 68 of 2023 C/w. G.W.O.P.2/2024**

ம.சா.1 ஜெயகுமார் இன்று 17.07.2026 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:

குறுக்கு விசாரணை:

நான் B.Sc., Visual communication படித்துள்ளேன். என்னுடைய கல்வி தகுதியை காண்பிக்கும் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. G.W.O.P. 2/2024ல் மனுதாரர் ரூபன் என்னுடைய மாமனார். எனக்கும் ரூபனின் மகள் இசபெல் ேஹமலதாவிற்கும் 20.04.2009ல் திருமணம் ஆனது. திருமணத்திற்கு முன்பு நான் சென்னையில் வசித்தேன். திருமணம் ஆனபிறகுதான் நான் அவர் சென்னைக்கு வர மறுத்துவிட்டதால் கோத்தகிரிக்கு என் மனைவி வீட்டிற்கு குடிவந்தேன். நான் திருமணத்திற்கு முன்பு சென்னையில் பிரின்டிங் மற்றும் விளம்பரம் தொழில் செய்து வந்தேன். அந்த ஆபிசை திருமணத்திற்கு பிறகு சுமார் 5 மாதங்கள் கழித்து மூடிவிட்டேன். திருமணத்தின்போது என் மனைவி ஆசிரியையாக சிங்காராவில் மசினகுடி அருகில் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் பணிபுரிந்தார். நானும் என் மனைவியும் சிங்காராவில் 2 வருடங்கள் குடியிருந்தோம். அதன்பிறகு கோத்தகிரி தாலுக்கா கொட்டநல்லி பள்ளிக்கு டிரான்ஸ்பர் ஆகிவிட்டார். கொட்டநல்லி பள்ளியில் என் மனைவி பணிபுரிந்தபோது நாங்கள் என் மாமியார் வீட்டில் வசித்து வந்தோம். திருமணத்தின் போது என் மனைவிக்கு மாத சம்பளம் ரூபாய் 12,000/- இருக்கும் என்று

நினைக்கிறேன். என் மனைவி சிங்காரா மற்றும் கொட்டநல்லியில் வேலை செய்து வந்தபோது எனக்கு வேலை எதுவும் இல்லை என்றால் தவறு, நான் இடை இடையே சென்னைக்கு சென்று என்னுடைய தொழில் சம்பந்தமான பணியை செய்துவந்தேன்.

G.W.O.P. 68/2023மனுவில் என் மனைவியின் பெற்றோர் என் மனைவியை வெளிநாட்டிற்கு செல்லும்படி வற்புறுத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்பது சரி. 2016ஆம் ஆண்டு கால கட்டத்தில் அவ்வாறு என் மனைவியை அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள். இந்த வருடத்தை நான் என் மனுவில் குறிப்பாக சொல்லவில்லை என்பது சரி. என் முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் இதை 2017 வருடம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்பது சரி. என் மனைவி முதலில் B.A படித்திருந்தார். திருமணத்திற்கு பிறகு M.A சேர்ந்து அவர் அதை முடிக்கவில்லை. B.A. படிப்பை வைத்துக்கொண்டு வெளிநாட்டில் அவர் வேலைக்கு செல்லமுடியுமா என்றால் டீச்சர் வேலை வெளிநாட்டில் வாங்கிதருவதாக கூறி புரோக்கரிடம் என் மனைவி பணத்தை கொடுத்து ஏமாந்துவிட்டார். என் மனைவி தமிழில் வகுப்புகள் நடத்திவந்தார். என் மனைவியை வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்லும்படி அவர் பெற்றோர் வற்புறுத்தி வந்ததாக நான் கூறியுள்ளது பொய் என்றால் தவறு. என் மனைவிக்கு தமிழ் மட்டுமே தெரியும் என்ற நிலையில் அவர் வெளிநாட்டில் வேலைக்கு செல்ல ஏற்பாடு செய்து வந்ததாக கூறுவது பொய் என்றால் தவறு. என் மனைவிக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுள்ளது.

என் மனுவில் என் மனைவி என்னை கொடுமை செய்ததால் நான் என் சகோதரி வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று கூறியுள்ளேன்

என்பது சரி. என் முதல் விசாரணைக்கான என் பிரமாண வாக்குமூலத்தில் நான் சென்னை சென்றுவிட்டேன் என்று கூறுவது சரி. என் மனு பத்தி 4லும், என் பிரமாண வாக்குமூலம் பத்தி 5லும் முரண்பட்ட சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் தவறு.

என் மனைவி 03.08.2018ல் இறந்தார். நான் 2019ல் உயர்நீதிமன்றத்தில் ஆட்கொனர்விப்பு ரிட் மனு தாக்கல் செய்தேன் என்பது சரி. அந்த மனுவை நான் ம.சா.ஆ–6ஆக தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. அந்த மனுவை நான் தாக்கல் செய்தபோது என் குழந்தை என் மாமனார் வீட்டில் இருந்தது. அந்த மனுவை தாக்கல்செய்தபிறகு என் மாமனார் குடும்பத்தினர் ஊள்ளூர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்துவிட்டதாக உயர்நீதிமன்றத்தில் சொன்னார்கள். உயர்நீதிமன்றத்தில் அந்த மனுவில் குழந்தையை ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் பார்த்துக்கொள்ள எனக்கு அனுமதி வழங்கி எனக்கு உத்தரவிட்டார்கள். என் மாமியார் தாக்கல் செய்த G.W.O.P.28/2021 மனுவில் நான் ஆஜரானேன். அந்த மனு சமரச நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டது என்பது சரி. நான் அதில் குழந்தை என் மாமியாரிடமே இருந்துவர ஒப்புக்கொண்டேன் என்றால், நீதிமன்றம் அறிவுறுத்தியதால் நான் அவ்வாறு ஒப்புக்கொண்டேன். G.W.O.P.28/2021ல் என் குழந்தைக்கு என் மாமியாரை Guardianஆக நியமித்து உத்தரவிடப்பட்டது என்றால் இல்லை. G.W.O.P.28/2021 மனுவில் நான் என் மகளை மாத்தில் முதல் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தையை பார்த்துக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது என்பது சரி. ஆனால் அதன்படி

குழந்தையை அவர்கள் எனக்கு காண்பிக்கவில்லை என்பதால் நான் உயர்நீதிமன்றத்தில் அவமதிப்பு மனு தாக்கல் செய்தேன். இந்த விவரங்களை நான் G.W.O.P.68/2023 மனுவில் குறிப்பிட்டுள்ளேன். என் மாமியார் 26.09.2021ல் இறந்துவிட்டார் என்பது சரி. என் மாமியார் இறந்தபிறகு என் மகள் யார் பாதுகாப்பில் இருந்தார் என்றால் யார் பாதுகாப்பில் இருந்தார் என்பது தெரியாது, குழந்தையை பார்க்க என்னை அனுமதிக்கவில்லை என்பதால் எனக்கு தெரியாது, குழந்தை அந்த வீட்டில் இருந்தது என்பது மட்டும் தெரியும். என் மாமியார் இறந்தபிறகு என் குழந்தை என் மாமனார் பாதுகாப்பில்தான் இருந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் தவறு. என் மாமியார் இறந்தபிறகும் நான் என் குழந்தையை முதல் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் பார்த்துவந்தேன் என்றால் உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு மனுவில் உத்தரவிட்டபிறகுதான் அவ்வாறு குழந்தையை காண்பிக்க ஆரம்பித்தார்கள். நான் கூறுவது தவறு என்றும், என் மாமியார் இறந்தபிறகு குழந்தையை முதல் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் என்னிடம் என் மாமனார் விட்டு சென்று அழைத்துவந்தார் என்பது தவறு.

G.W.O.P. 2/2024 மனுவில் என் மனைவி எழுதி வைத்ததாக ஒரு உயில் ஆவணத்தை என் மாமனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு, என் மனைவி எப்பொழுதும் தமிழில்தான் கையொப்பம் இடுவார், ஆனால் அதில் ஆங்கில கையொப்பம் உள்ளது. G.W.O.P. 2/2024 மனுவில் நான் தாக்கல் செய்த எதிருரையில் இந்த விளக்கத்தை கூறவில்லை என்றால் நான் தற்பொழுதுதான் அந்த உயில்

ஆவணத்தையே பார்க்கிறேன். G.W.O.P. 2/2024 மனுவில் எதிருரை தாக்கல் செய்ய என் வழக்கறிஞருக்கு நான்தான் விவரம் சொன்னேன் என்பது சரி. அந்த உயில் சாசனப்படிக்கு என் மனைவி அவரது பணப்பலன்கள் என் மகளைத்தான் சேரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், அந்த உயிலே அவர் எழுதவில்லை.

கல்விதுறை என் மனைவி இறந்தபிறகு மொத்தம் ரூபாய் 18,60,608/– தொகை வழங்கினார்கள் என்றால் கொடுத்தார்கள். அதில் 50% தொகையை என் மகள் பெயரில் டெபாசிட் போட்டுவிட்டேன். அந்த 50% தொகையை என் மகள் பெயரில் கல்விதுறை நிர்வாகமே டெபாசிட் செய்துவிட்டார்கள். மீதம் உள்ள 50% தொகையை நான் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்பது சரி. நான் பெற்றுக்கொண்ட அந்த 50% தொகையும் உயில் சாசனப்படி என் மகளைதான் சேரவேண்டும் என்றால் தவறு. என் மகள் பெயரில் கனரா வங்கி கோத்தகிரி கிளையில் அந்த 50% தொகையை கல்விதுறை டெபாசிட் செய்துள்ளது.

என் மனைவி Max Life Insurance கம்பெனியில் மூன்று பாலிசி எடுத்திருந்தார் என்பது சரி. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படுவது அந்த பாலிசிகள் என்பது சரி. அந்த 3 பாலிசிகள் அசல் **எ.சா.ஆ–1** வரிசை. நான் அந்த பாலிசிகளை என் மகள் பெயருக்கு மாற்றிவிட்டேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது**.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.07.17 15:22:17 +0530